தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2018

ஆண்டு: 4 திகதி: 23.06.2018

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செ .ஜெயமனோகரன்

மாணவர் பெயர்: ______________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |

1. பின்வரும் கதையை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

முன்னொரு காலத்தில் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் இடையே சண்டை ஒன்று நடந்தது. இவ் வேளையில் வெளவால்கள் எந்தப் பக்கமும் சேர வில்லை. அவை "எம்மால் பறக்க முடியும். ஆகையால் பறவைகளுடன் சேரலாம். நாம் பறவைகள் போல் முட்டையிடுவதில்லை. விலங்குகள் போல் குட்டி ஈன்று பால் கொடுக்கின்றோம். ஆகையால் விலங்குகளுடனும் சேரலாம்" என்று எண்ணியதுடன் வெற்றி யார் பெறுகிறார்களோ அவை பக்கம் சேர்ந்து கொள்ளலாம் என்று காத்து இருந்தன.

சண்டை ஒரு கட்டத்தில் வேகம் அடைந்து விலங்குகள் வெற்றி பெறலாம் என்ற நிலை வர, வெளவால்கள் விலங்குகள் பக்கம் சேர்ந்து கொண்டன. ஆனால் மறு கணமே நிலைமாறி பறவைகள் வெல்லும் நிலைமை ஏற்படுவது போலத் தெரிந்தது. உடனே அவை பறவைகள் பக்கம் மாறிக்கொண்டன.

இறுதியில் சண்டை ஒரு வழியாக முடிவுற்றது. பறவைகளும் விலங்குகளும் சமாதானம் செய்து நண்பர்கள் ஆக மாறிவிட்டன. ஆனால் சுயநலம் பிடித்த வெளவால்களை அவை ஒதுக்கித் தள்ளிவிட்டன.

தனித்து விடப்பட்ட வெளவால்கள் இருண்ட பொந்துகளில் சென்று ஒளிந்து கொண்டன. அன்று முதல் அவை இருட்டில் ஒளிந்தே வாழ்கின்றன. பகலில் மிருகங்களும், பறவைகளும் வெளியே வந்து உணவு தேடி, இருட்டியவுடன் அவை தமது இருப்பிடங்களுக்கும் கூடுகளுக்கும் சென்று விடுகின்றன. வெளவால்கள் இரவில் மட்டுமே வெளியே வருகின்றன.

I. இக்கதையில் யாரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது?

________________________________________

II. வெளவால்களால் என்ன செய்ய முடியும்?

________________________________________

III. வெளவால்கள் எந்தப்பக்கம் சேர்ந்து கொண்டன?

________________________________________

IV. வெளவால்கள் எங்கு வாழ்கின்றன?

________________________________________

V. இக்கதையில் இருந்து நீர் அறிந்து கொள்ளும் புத்திமதி என்ன?

________________________________________

(20 புள்ளிகள்)

2a. பிரித்து எழுதுக

I. வாழைப்பழம் ____________+____________

II. மரவேர் ____________+____________

III. கலைவிழா ____________+____________

IV. படிக்கட்டு ____________+____________

V. முத்தமிட்டாள் ___________+______________

2b. ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

I. இல்லம் ____________________

II. நண்பன் ____________________

III. சந்தோசம் ____________________

IV. அப்பா ____________________

V. அரசன் ____________________

(10 புள்ளிகள்)

3. கருத்துடைய மூன்று சொற்களைக் கண்டு பிடிக்கவும்

I. பல்கலைக்கழகம். 1________________2________________3________________

II. நீர்வாழ்உயிரினங்கள் 1________________2________________3________________

III. இரும்புப்பாதை 1________________2________________3________________

IV. தலைநகரம் 1________________2________________3________________

V. மணித்தியாலங்கள் 1________________2________________3________________

(10 புள்ளிகள்)

4. பின்வரும் சொற்களை பொருத்தமான இடைவெளிகளில் எழுதுக.

தெய்வம், மாலை, மகிழ்ச்சி கொள், ஒளிக்கதிர்கள், விளக்கு

I. சூரியனின் ________________ கிழக்கு வானில் தாவின.

II. அன்னையும் பிதாவும் முன்னறி ______________________

III. வண்ணப் பறவைகளைக் கண்டு நீ மனதில் ____________ ____________

IV. இன்று தெரு __________________ எரியவில்லை.

V. பூக்களைத் தொடுத்து _______________ கட்டலாம்.

(15 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி உமது உறவினருக்கோ அல்லது நண்பருக்கு ( 50 சொற்கள்) ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

i. அண்மையில் உமது தமிழ்ப் பாடசாலையில் நடந்த கலை விழா.
ii. அவுஸ்திரேலியாவின் நிலவும் பருவகாலங்கள்.

6. தொடர்பு படுத்துக

| | | |
|---|---|---|
| I. | மிருகக் காட்சி | கூடு |
| II. | குறிப்பு | மணி |
| III. | நுழைவு | சாலை |
| IV. | குருவி | சீட்டு |
| V. | பத்து | புத்தகம் |

(10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 50 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

I. எமது பாடசாலையில் பொங்கல் விழா

II. செல்லப் பிராணி

III. உமது விடுமுறையை எவ்வாறு கழித்தீர்

(20 புள்ளிகள்)